கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண்</u>**.205/2018**

<u>அ.சா</u>**.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **சிவகுமார்** | சாதி | |
| த/பெ. | **துரைகண்** | மதம் | |
| கிராமம் | **காலேஜ் நகர்** | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 36 |
| மாவட்டம் | **விழுப்புரம்** | தேதி | 28.7.2022 |

( 28.07.2022) இன்று 1963 ம் ஆண்டு சட்டம் 44 ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிகிறேன். கடந்த 2014ல் விழுப்புரத்தில் உள்ள விஜய் கேஸ் நிறுவனத்தில் கேஸ் சிலிண்டர் எடுத்து செல்லும் ஆட்டோ ஓட்டுநராக பணியாற்றினேன். 2014ல் ஒரு நாள் சாயந்திரம் சுமார் 5.30 மணியளவில் எனது நண்பர் அய்யப்பனும் நானும் விழுப்புரம் ரயில்வே இன்ஸ்சுட் கிரவுண்டில் இருக்கும் போது எனக்கு போன் செய்து ரயில்வே போலீஸ்காரர் லோகேஉஷ்குமார் என்பவர் அய்யப்பனையும், என்னையும், விழுப்புரம் ரயில்வே காவல் நிலையத்திற்கு வருமாறு அழைப்பதார். அதே போல் என்னுடன் இருந்த அய்யப்பனுக்கும் போன் செய்து அழைத்தார். நான் அன்று மாலை 6.00 மணியளவில் விழுப்புரம் ரயில்வே காவல் நிலையத்திற்கு நானும் அய்யப்பனும் போனோம். அங்கு நிறைய போலீசார் இருந்தார்கள். அங்கு ரயில்வே காவல் நிலையத்தில் லோகேஉஷ்குமார் இல்லை. அங்கிருந்த போலீசார் வெள்ளை பேப்பரில் என்னிடமும், அய்யப்பனிடமும், கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் நீங்கள் போகலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். இரண்டு நாட்கள் கழித்து ரயில்வே காவல் நிலையத்தில் யாரோ இறந்துவிட்டதாக நான் செய்திதாள் மூலம் தெரிந்துகொண்டேன். என்னை விழுப்புரம் டவுன் போலீசாரும், வக்கீலும் விசாரித்தார்கள். அப்போது ரயில்வே காவல் நிலைய போலீசார் ஒரு நபர் பிட்பாக்கட் அடித்துவிட்டு ஓடும்போது கீழே விழுந்து அடிப்பட்டு விட்டது என்று என்னிடம் சொல்ல சொன்னார்கள் அவ்வாறே நான் காவல் துறையின் விசாரணையில் சொன்னேன். பிற்பாடு நீதிபதியின் முன்பே அவ்வாறே வாக்குமூலம் கொடுத்தேன். ஆனால் உண்மையில் அப்படி சம்பவம் நடக்கவில்லை. லோகேஉஷ்குமாரும், மற்ற அதிகாரிகளும் சொன்னததால் தான் நான் அவ்வாறு வாக்குமூலம் கொடுத்தேன். உண்மையில் அப்படி சம்பவம்

நான் பார்க்கவில்லை. பின்னர் சுமார் 1 வருடம் கழித்து சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தனர். உண்மையை சொல்ல சொன்னார்கள். நானும், அய்யப்பனும் உண்மையை சொன்னோம். பிப்பாக்கட் ஒரு நபர் அடித்ததாகவும், அவர் ஓடும் போது கீழே விழுந்து அடிப்பட்டதாகவும், ஒரு சம்பவமே நடக்கவில்லை என்ற உண்மைய சொன்னேன். சிபிசிடிஐ போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் விழுப்புரம் எம்ஆர்ஐ பள்ளியில் படித்தேன். நான் அய்யப்பன், லோகேஉஷ்குமார் பள்ளி நண்பர்கள். அடிக்கடி லோகேஉஷ்குமாரை விளையாட வரும்போது பார்ப்பேன். நான் சிலிண்டர் ஆட்டோ வேலை சம்பவ காலத்தில் பார்த்தேன். இன்டேன் கேஸ் கம்பெனி ஆகும். இன்டேன் கேஸ் ஏஜேன்ஸில் நான் ஆட்டோ ஓட்டினேன். கம்பெணியின் ஆட்டோவில் சிலிண்டர் ஏற்றி செல்வோம். காலை 6 மணிக்கு வேலைக்கு போவேன். மாலை 5 மணி வரை வேலை இருக்கும். என்னை விழுப்புரம் டவுன் போலீசார் விசாரித்தார்கள், ரயில்வே போலீசாரும் என்னை விசாரித்தார்கள். எனது செல்போன் நம்பர் மற்றும் லோகேஉஷ் செல்போன் நம்பரை போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் இல்லை. ரயில் இன்ஸ்கூட் கிரவுண்டில் ' இருந்த போது போன் வந்ததாக சொன்னேனர் என்றால் இல்லை. எத்தனை மணிக்கு போன் வந்தது என சொன்னேனா என்றால் இல்லை. நான் எதையும் படிக்காமல்தான் கையொப்பம் போட்டேன். எனது பெயர் அப்பா பெயர் விபரம் எல்லாம் சொன்னேன் என்றால் சரிதான். ரயில்வே போலீசாரை முன்ன பின்ன எனக்கு தெரியாது என்றால் சரிதான். லோகேஉஷ்குமார் என்னை வரசொன்னார் என்று சொல்லி நாங்கள் தான் ரயில்வே காவல்நிலையம் சென்று கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான். நாங்கள் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்கும் போது லோகேஉஷ்குமார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. லோகேஉஷ்குமார் சஸ்பென்ட் செய்யப்பட்டார் என்றால் சரிதான். அவர் இவ்வழக்கில் அவர் சாட்சியாக இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. லோகேஉஷ்குமாரின் வேலையை காப்பாற்ற நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1,2,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1,2,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும், 1,2,4,5 எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய யாரும் முன் ' வரவில்லை என்பதால் குறுக்கு விசாரணை இல்லை என முடிவு செய்யப்படுகிறது.